வித்திருக்கிறார்கள். குறிப்பாக கடைமடைப் பகுதியிலுள்ள அலங்கள் என்ற பகுதி திட்டாக, தண்ணீர் இல்லாமல் காய்ந்து கிடக்கிறது. அந்தப் பகுதியிலே தண்ணீரைத் தேக்கி வைத்து, பம்ப்செட் மூலமாக பாசனத்திற்குப் பயன்படுத்த வாய்ப்பு இருக்கிறதென்று சொல்லுகிறார்கள். இதையெல்லாம் கருத்திற்கொண்டு அரசு செயற்குறிப்பைத் தயாரிக்குமா ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : இப்போது வெள்ளத் தடுப்புக்கு என்று தனியாக சிறப்பு தலைமைப் பொறியாளரை தமிழக அரசு நியமித்திருக்கிறது. அவர், தஞ்சையைத் தலைமையகமாகக் கொண்டு பணியாற்றுகிறார். அவரிடம் மாண்புமிகு உறுப்பினரவர்களின் யோசனையை எடுத்துச் சொல்லி, எவ்வளவு தூரத்திற்கு அது சாத்தியக்கூறானது என்பதைக் கண்டறிந்து, தேவைப்பட்டால் உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் (*) உடுக்குறி, அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.)

2. கவன ஈர்ப்பு.

தமிழாசிரியர்கட்கு தலைமையாசிரியர் பதவி வழங்காததால் தமிழாசிரியர்கள் பாதிக்கப்பட்டுள்ளது குறித்து.

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, கீழ்க்கண்ட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினைக் குறித்து மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் கவனத்தை ஈர்க்கிறேன் :

"தமிழாசிரியர்கட்கு தலைமையாசிரியர் பதவி வழங்க நீதி மன்றத்தின் தீர்ப்பு வந்த பிறகும், உயர்நிலைப் பள்ளியிலும், மேல் நிலைப் பள்ளியிலும் வழங்கப்படுவதற்கான எந்த நடவடிக்கையும் எடுக்காததனால் தகுதியுடைய தமிழாசிரியர்கள் நூற்றுக் கணக்கில் பாதிக்கப்படுவது குறித்து."

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவரவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவை முன் வைக்கப்பட்டிருக்கிறது.

@ 403-404 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

LEGISLATIVE ASSEMBLY TAMIL NADU வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1984 மார்ச் 27]

திரு. செ. முத்துசாமி : அரசு உத்தரவு வெளியிடுவதற்கு முன்னதாகவே அரசின் கவனத்திற்கு வர வேண்டும் என்பதற்காக இதைக் கொடுத்திருக்கிறேன். ஆனாலும் காலம் தாழ்த்தி உத்தரவு வழங்கிய பிறகு இந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்திலே பதிலைத் தந்திருக்கிறார்கள். தமிழ் ஆசிரியர்கள் தலைமையாசிரியர்களாகப் பணியாற்றத் தகுதி உண்டு, அவர்கள் முன்பு பணியாற்றிய சர்வீசையும் கணக்கில் எடுத்து தலைமையாசிரியர் பதவியை வழங்க வேண்டுமென்று உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு சொல்லியிருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் தமிழ் ஆசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி வழங்க வேண்டுமென்ற கருத்தை ஒப்புக்கொண்டு ஏற்கெனவே இதுபற்றி அறிவித்திருக்கிறார்கள். ஆனாலும் உயர்நீதிமன்றத்தின் தீர்ப்புக்கு எதிராக அரசு அப்பீல் செய்திருப்பதன் நோக்கம் என்ன? உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பு தவறு என்று கருதி அவ்வாறு கல்வித் துறை அப்பீல் செய்திருக்கிறதா? அவர்கள் பி.டி. பட்டம் பெற்றதற்குப் பிறகும் தலைமையாசிரியர் பதவி அளிக்காமல் வேறு ஏதாவது பட்டம் இன்னும் பெற வேண்டுமென்று அரசு கருதுகிறதா? ஏற்கெனவே அவர்கள் தமிழைப் படித்து, தமிழைப் பயிற்றுவித்து வருகிறார்கள். அவர்களுடைய பழைய சர்வீசைக் கணக்கில் எடுத்து தலைமையாசிரியர் பதவி அளிக்க வேண்டுமென்று உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பில் என்ன தவறு இருக்கிறது? ஏன் கல்வித் துறை அப்பீலுக்குச் சென்றது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : டிப்ளமா பெற்று ஆசிரியராகப் பணியாற்றிய பணிக் காலமும், பட்டம் பெற்று ஆசிரியராகப் பணியாற்றிய பணிக் காலமும் சமமாகக் கருதப்பட வேண்டுமென்று நீதிமன்றம் உத்தரவு போட்டிருக்கிறது. அரசைப் பொறுத்தவரையில், எந்த நிலையிலும் அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அத்தகைய நிலைமைகளையும் உண்டு பண்ணவில்லை. ஆகவே அதைத்தான் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். உயர்நீதி மன்றத் தீர்ப்பு வந்திருப்பதால், உத்தரவைச் செயல்படுத்தியிருக்கிறோம். உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தவரையில், அப்பீல் செய்கின்றபோது அப்பீலில் என்ன கருத்தைச் சொன்னார்கள் என்று தெரியாது. மேலும் அதைப்பற்றி நாம் பரிசீலிப்பதற்கு கால அவகாசமும் தேவைப்படுகிறது.

திரு. செ. முத்துசாமி : தெளிவாக நான் ஒரு கேள்வி கேட்டேன். தமிழ் ஆசிரியர்களைப் பொறுத்தவரையில் . . .

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தெளிவாகத்தான் நானும் பதில் சொன்னேன். பட்டயப் படிப்பு என்பது வேறு. பட்டப் படிப்பு என்பது வேறு.

திரு. செ. முத்துசாமி: தெளிவாக மீண்டும் வலியுறுத்தி மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பதில் சொன்னதற்கு நன்றி. தமிழ் ஆசிரியர்கள் பழைய நிலையில் மீண்டும் அதே பி.டி. பயிற்சியைப் பெற்ற பிறகு மீண்டும் அதே தமிழைத்தான் போதனா முறையில் சொல்லித் தருகிறார்கள். அப்படி இருக்கும்போது, இன்னும் ஐந்து ஆண்டுக் காலத்தில் அவர்களிட மிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என்று கல்வித் துறையைக் கேட்டேன். கல்வித் துறையிலிருந்து பதில் இல்லை. அதே சமயத்தில் தற்காலிகமாக என்று சொல்லித் தந்திருக்கிறார்கள். மீண்டும் பத்து ஆண்டுக் காலம் சர்வீஸ் ஆனால்தான் தலைமையாசிரியர் பதவியைத் தருவோம் என்று திட்டவட்டமாக அறிவித்துள்ளார்கள். அப்படியானால் தமிழ் மொழியைப் படித்தவர்களை வைத்து சொல்லிக் கொடுக்காமல் பி.டி. ஆசிரியர்களை வைத்துத்தான் சொல்லித் தர வேண்டுமென்று வலியுறுத்துகிறார்களா? ஆகவே அவர்களுடைய பயிற்சியையும் சர்வீசையும் கணக்கில் எடுத்துக் கொண்டு அவர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி தர கல்வித் துறைக்கு மனம் இல்லையா? அப்படி என்றால் ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்கு என்ன பொருள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: பட்டயப் படிப்பையும் பட்டப் படிப்பையும் சமப்படுத்துகின்ற நிலை இருப்பதால், அரசு இதில் யோசனை செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல் தமிழ் ஆசிரியர், தமிழ் ஆசிரியர் என்று பொதுவாகப் பேசிக் கொண்டிருப் பதால், இந்த அவைக்கு ஒரு தெளிவான கருத்தைச் சொல்வதாகாது. கொடுக்கக்கூடாது என்ற எண்ணமும் நமக்கு இல்லை. இதைப்பற்றி நான் முன்பே பல நிலைகளில் சொல்லி வந்திருக்கிறேன். தமிழ் ஆசிரியர்களுக்குத் தலைமையாசிரியர் பதவி கொடுக்கக் கூடாது என்பதல்ல நம்முடைய நோக்கம். கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. ஆனால் முதலில் இதில் உள்ள சிக்கல்களைத் தீர்க்க வேண்டும். காரணம் இது ஒரே ஒரு பிரிவினருக்கு வரக்கூடிய சலுகை அல்ல. இதைப் போல பல்வேறு பிரிவினர் பணியில் இருக்கிறார்கள். தவிரவும் இப்போது டிப்ளமோ படித்த என்ஜினியர்களும், டிகிரி படித்த என்ஜினியர்களும் இருக்கிறார்கள். ஆகவே இதிலிருந்து அதில் நாம் செல்லும்போது, பல் வேறு நிலைகளை எல்லாம் பரிசீலித்துப் பார்த்து முடிவு செய்ய வேண்டி யிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பிரிவினருக்கு ஆதரவாக உறுப்பினர் பேசு கிறார் என்றால், வலியுறுத்துகிறார் என்றால், அவருடைய கடமையை அவர் செய்து கொண்டிருக்கிறார். ஆனால் இதுகுறித்து முடிவு காணும்போது ஒரு அமைச்சர் என்கிற முறையில் அல்லது ஒரு அரசு என்கிற முறையில்

பதில் சொல்லும் போது, ஒரே ஒரு பிரிவினருக்காக மட்டும் பதில் சொல்கின்ற நிலையில் யாரும் இருக்கமாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. அரசின் தீர்மானம்.

கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின்மீது விவாதம்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, "சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பு @ பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்" என்ற தீர்மானத்தை முன்மொழிகிறேன்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்மொழியப்பட்ட தீர்மானம்—

"சட்டமன்ற மேலவையின் முன் வைக்கப்பட்டுள்ள கல்விபற்றிய கொள்கைக் குறிப்பு பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்".

உறுப்பினர்களுக்கு ஒரு வேண்டுகோள். இன்று 12 பேர் பேச வேண்டியிருக்கிறது. இன்றைக்கே இது பற்றிய விவாதம் முடிய வேண்டும். நேரத்தை நிர்ணயித்துக் கொண்டாலொழிய வேறு வழியில்லை. உறுப்பினர்களுக்கு 10 நிமிடங்களும், கட்சித் தலைவர்களுக்கு 20 நிமிடங்களும், எதிர்க் கட்சித் தலைவருக்கு முப்பது நிமிடங்களும் என்று வரையறுக்கப்பட்டிருக்கிறது. தயவு செய்து உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். திரு. அருணாசலம் பேசுவார்.

(திரு. முத்துசாமியும் திரு. மீனாட்சிசுந்தரமும் எழுந்தனர்)

மாண்புமிகு மேலவைத் தலைவர் : ஒருவர் மட்டும் சொல்லுங்கள்.

(முற்பகல் 10-30)

திரு. செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே, எப்போதுமே நீங்கள் தலைவராக வந்ததிலிருந்து நடைமுறை ரீதியாக கல்வி பற்றிய கொள்கைக் குறிப்பின் மீதான விவாதத்தில் இரண்டு நாள் வழக்கமாக ஒதுக்குவது வழக்கம். இந்த ஆண்டு மட்டும் ஒரே ஒரு நாள் என்ற காரணத்தை அறிய முடியவில்லை. கல்விப் பிரச்சினைகள் குறைந்து விட்டதா? கல்விப் பிரச்சினைகள் தொடர்ந்து இருப்பது. இது உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், சமுதாயத்திற்கும் இருப்பது. இன்றைக்கு திடீரென்று ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைந்துவிட்டதா? அல்லது

@ 405-480 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.